**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 04.08.2026</u>**

**OS.127/2024**

**வா.சா.3 திரு.தமிழரசு**

**வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அக்ரிமெண்ட் கடனுக்காக போடப்பட்டதா அல்லது நிலம் வாங்குவதற்காக போடப்பட்டதா என்றால் நிலம் வாங்குவதற்காக போடப்பட்டது. நிலம் எந்த ஊரில் உள்ளது என்றால் G.மூக்கனூர் பட்டியில் உள்ளது. அதன் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. அக்ரிமெண்ட் போட்டது எத்தனை ஏக்கருக்கு போடப்பட்டது என்றால் தண்ணீர் பாயக்கூடிய நிலம் ஒரு பகுதி 84 செண்ட், மேட்டுநிலம் 1 ஏக்கர் 21.5 செண்ட். 84 செண்ட் என்று சொல்வது எவ்வளவு விலை என்றால் ஒரு செண்ட் ரூ.33,000/-. 84 செண்ட் மொத்தம் எவ்வளவு ரூபாய் விலைபேசப்பட்டது என்றால் கால்குலேட்டரில் போட்டு பார்த்தால் சொல்லமுடியும்.

2. அக்ரிமெண்ட் போட்டதாக சொல்வது எந்த தேதியில் என்றால் 28.08.2024ம் தேதி. அந்த அக்ரிமெண்ட்டிற்கான வியாபாரம் யார் யார் பேசியது என்றால் 7ல் இருந்து ஒரு 10 பேர் வரை பேசினோம், அவர்கள் பெயர் 1. தமிழரசாகிய நான், 2.ராமசந்திரன், 3.தெய்வானை, 4.சத்யா, 5.ராதா, 6.முருகன், 7.சாமிகண்ணு, 8.சுந்தரம், 9.ஆதிமூலம் ஆகியோர். அக்ரிமெண்ட்

போடப்பட்ட நிலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அருள், தெய்வாணை, சத்யா ஆகியோருக்கு சொந்தமானது. மேற்படி அருள், தெய்வாணை, சத்யா ஆகியோருக்கு நிலம் எப்படி பாத்தியப்பட்டது என்று நான் ஆவணங்கள் வாங்கி பார்த்தேனா என்றால் நான் எதுவும் ஆணவம் வாங்கி பார்க்கவில்லை, அந்த நிலம் அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது, நான் அதே ஊரில் வசிப்பவர், அவர்கள் நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர் அதனால் எனக்கு தெரியும். வியாபாரம் எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் அருள் வீடு உள்ள G.மூக்கனூர் பட்டியில் அவர் வீட்டு முன்பு வாசலில் வைத்து பேசப்பட்டது. எந்த நேரத்தில் அவ்வாறு பேசப்பட்டுதுஎ ன்றால் காலை 11 மணியில் இருந்து மதியம் 2 மணிக்குள் பேசப்பட்டது .

3. அக்ரிமெண்ட் போட்ட பத்திரம் யார் வாங்கி வந்தது என்றால் சக்தி என்பவர் வாங்கி வந்தார். அந்த பத்திரத்தை யார் எழுதியது என்றால் சாமிக்கண்ணு. அந்த சாமிக்கண்ணுவின் அப்பா பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியவில்லை. சாமிக்கண்ணு எந்த ஊர் என்றால் கர்த்தாங்குளம். எவ்வளவு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.3,50,000/-. அந்த பணத்தை யார் யாரிடம் கொடுத்தது என்றால் சக்தி, மாது ஆகிய இருவரும் சேர்ந்து அருள், தெய்வானை ஆகிய இருவரிடம் கொடுத்தார்கள். என்ன தேவைக்காக நிலத்தை விற்பனை செய்தார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை.

4. எவ்வளவு நாட்களுக்குள் கிரையம் செய்து கொள்ள வேண்டியது என்று டைம் கொடுக்கப்பட்டது என்றால் 3 மாதம். அந்த 3 மாத காலத்திற்குள்

அக்ரிமெண்ட்படி கிரையம் செய்து கொள்ளவில்லை என்றால் அவர்கள் கொடுத்த அட்வான்ஸ் தொகை இழந்துவிடவேண்டியது என்று அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உடன்படிக்கை ஏற்பட்ட ஓரிரு நாளில் கிரையம் செய்து கொடுக்க மறுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் அவ்வாறு மறுத்துவிட்ட விசயம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். ஊர் பெரியவர்களை வைத்து பைசல் பேசியதாக சொல்லியுள்ளேன் அது எந்த தேதி என்றால் தேதி எனக்கு நினைவில்லை. யாரை வைத்து அந்த பைசல் பேசப்பட்டது என்றால் பெயர் எனக்கு நினைவில்லை, ஏற்கனவே வியாபாரம்பேச வந்தவர்களும் வந்திருந்தார்கள். நான் சொல்வதுபோல பிரதிவாதிகள் கிரயம் செய்து கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்ற சொல்வது பொய்யானது, நான் சொல்வதுபோல பஞ்சாயத்து எதுவும் பேசவிவில்லை வாதிகளுக்கு அனுசரனையாக வாதிகளுக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கடைசியாக பிரதிவாதிகள் சென்று கேட்டபோது அவர்கள் கிரையம் செய்து கொடுக்க மறுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் அது எந்த தேதி என்றால் தேதி எனக்கு நினைவில்லை.

5. நான் மொரப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொல்லியுள்ளேன் அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டபோது நான் சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. சத்யா என்பவர் என்ன வேலையில் உள்ளார் என்றால் அவர் போலிஸ் வேலையில் உள்ளார். அவர் பெயரில் நிலம் எதுவும் இல்லை என்றால் அவர் அருள் என்பவரின் மனைவி, அவர் பெயரில் எந்த

நிலமும் இல்லை, அருள், தெய்வானை ஆகியோருக்கு தான் பூர்வீக சொத்த உள்ளது. சத்யாவிற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். அருள், தெய்வானை நிலத்தை கிரையம் செய்து கொடுக்க மறுக்கிறார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அருள், தெய்வானை முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியதாக சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லப்பட்டதா என்றால் இல்லை, ஆர்சாக பேசினார்கள்.

6. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 20 சென்ட் நிலம் வாதிகளிடமே உள்ளது, அதற்கு பணம் தரமுடியாது என்று வாதிகள் சொன்னதால்தான் வியாபாரம் நின்றுவிட்டது என்றால் அந்த பிரச்சனையும் உள்ளது. பணம் கொடுத்தது வட்டிக்கு எல்லாம் கொடுக்கவில்லை, நிலத்திற்க்காகத்தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 12% வட்டி கொடுக்கவேண்டும் என்று சொல்லியுள்ளேன் அப்படி எல்லாம் எதுவும் பேசவில்லை என்றால் அப்படி எதுவும் பேசவில்லை. சக்தியும், மாதுவும் வக்கில் நோட்டிஸ் கொடுத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. என்னிடம் காட்டப்படும் ஒப்பந்த பத்திரத்தில் எழுதியவர் என்று குறிப்பிட்டு அதில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சாரிதான், ஆனால் அதை சாமிக்கண்ணு என்பவர்தான் எழுதினார். அந்த ஒப்பந்த பத்திரத்தில் சாட்சிகள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் பெயர், அப்பா பெயர், எந்த ஊரை சார்ந்தவர்கள் என்று குறிப்பாக எழுதாமல் சாட்சிகள் என்று கையொப்பம்

மட்டும் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது எல்லாம் எதுவும் தேவைப்படாது என்று நினைத்துதான் அந்த சமயத்தில் கையொப்பம் செய்தார்கள், நானும் செய்தேன். அந்த ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் தவிர வேறு யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் சக்தி, மாது, அருள், தெய்வானை ஆகியோர் கையெழுத்து போட்டார்கள். அந்த ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படாத ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

8. சாட்சி கையொப்பம் செய்தவர்கள் என்று சொல்பவர்கள் எல்லாம் நான் உட்பட அனைவரும் சக்தி, மாதுவிற்கு உறவினர்கள் என்றால் எல்லோரும் இருவருக்கும் உறவினர்கள்தான். அக்ரிமெண்ட் போட்டுக்கொண்டதன்படி 3 மாதத்திற்குள் வாதிகள் கிரையம் செய்து கொள்ளவில்லை என்பதால் செலுத்தியுள்ள அட்வான்ஸ் தொகையை இழக்கவேண்டியது என்று சொன்னால் அவர்கள் கிரையம் செய்துகொள்ள தயாராகத்தான் இருந்தார்கள் ஆனால் அவர்களுக்குள் இருந்த சொத்து பிரச்சனையின் காரணமாக கிரையம் செய்துகொள்ள முடியாமல் போய்விட்டது. சொத்திற்கு மொத்தம் ரூ.52,00,000/- கிரைய தொகை வருகிறது, அந்த தொகையை வாதிகள் தயார் செய்ய முடியவில்லை என்பதால்தான் ஒப்பந்தப்படி கிரயம் செய்துகொள்ள முடியாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. வாதிகள் அனுப்பிய வக்கில் நோட்டிசில்கூட இடத்தை கிரையம் செய்து கொடுங்கல் என்று கேட்கவில்லை பணத்தை திரும்ப

கேட்டுதான் சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான், அவர்களுக்குள் சொத்து பிரச்சனை ஒருவருக்கொருவர் 10 சென்ட் என்னிடம் உள்ளது, உன்னிடம் உள்ளது என்று பிரச்சனை இருந்ததால் அவர்கள் கிரையம் செய்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது அதனால் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டுள்ளார்கள். ஒப்பந்தம் போட்டபடி வாதிகள் கிரயம் செய்துகொள்ளாததால் பிரதிவாதிகளும் மொத்த தொகையை வைத்து வேறு இடத்தில் சொத்தை வாங்கமுடியாமல் நஷ்டம் அடைந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.08.04 17:31:35 +0530